(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 19.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2009, ஆகஸ்ட் 06, வியாழக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0058 / '09

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) வட மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் மத்திய அரசாங்கம் அல்லது மாகாண சபைகளின் கட்டுப்பாட்டுக்குக் கீழ் உள்ள காணியின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) வட மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும்,

(i) வெளிநாட்டவருக்கு (அவர்களின் நாட்டின் பெயருடன்), கொம்பனிகளுக்கு, மற்றும் தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட காணிகளையும்,

(ii) அதற்குரிய நியதிகள் நிபந்தனைகள், அவற்றின் பெறுமதி மற்றும் வழங்கப்பட்ட காலம் ஆகியவற்றையும்

வெவ்வேறாக அவர் கூறுவாரா?

(இ) (i) தனியார்துறைக்குக் கையளிக்கப்பட்ட, மாற்றப்பட்ட, அல்லது குத்தகைக்கு விடப்பட்ட அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் பெயர்களை அதற்காக குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுடனும்,

(ii) அவை வழங்கப்பட்ட கால அளவையும்,

(iii) ஒப்பந்தத்தின் பெறுமதியையும்

அவர் குறிப்பிடுவாரா

(ஈ) இன்றேல், ஏன்?

0082 / '09

2.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பஸ் கட்டணங்கள் அதிகரித்தமையால் 2008 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கமவின் வருமானம் 17,150 மில்லியன் ரூபா வரை அதிகரித்துக் கொள்ளப்பட்டுள்ள தென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) இது ஸ்ரீலங்கமவின் முந்திய ஆண்டின் வருமானத்தைவிட 16.8 சதவீத அதிகரிப்பாகுமென்பதையும்,

(ii) பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டமையால் வருமானம் அதிகரித்துள்ள போதிலும் 2008 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கமவின் தொழிற்பாட்டு நட்டம் 3,554 மில்லியன் ரூபா வரை உயர்வடைந்துள்ளதென்பதையும் ,

(iii) மேற்படி நட்டம் முந்திய ஆண்டினைவிட 53.8 சதவீத அதிகரிப்பாகு மென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்கிறாரா ?

(இ) (i) மேற்படி அதிகளவு நட்டம் பெறக் காரணங்கள் யாவையென்பதையும் ,

(ii) விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரென்ற வகையில் இந்நிலைமயை மாற்றியமைக்க மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0228 / ’09

3.

கௌரவ பேமசிறி மானகே,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மருந்து வகைகள் கொள்வனவு செய்யும்போது பின்பற்றப்படவேண்டிய கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்படாமல் 2005 ஆம் ஆண்டில் 670 Streptokinase Injection அலகுகள், ஒரு அலகு 5000 ரூபாய் வீதம் கொள்வனவு செய்யப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டில் Streptokinase Injection ஒன்றின் சராசரி விலை எவ்வளவென்பதையும்,

(ii) ஏற்பட்ட நட்டத்தின் நிதிப் பெறுமதி யாதென்பதையும்,

(iii) 2005 ஆம் ஆண்டு இடம்பெற்ற நிதி முறைகேடுகளுக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள் யாவர் என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0267 / ’09

4.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கனிப்பொருள் ஏற்றுமதியாளர்களுக்கு 2009 பெப்ருவரி 03 ஆம் திகதி இன்றகொன்டினன்டல் ஹோட்டலில் நிகழ்ச்சித் திட்டமொன்று நடத்தப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், அதன் நோக்கங்கள் யாவை என்பதையும்,

(iii) அங்கு கலந்துரையாடப்பட்ட விடயங்கள் யாவை என்பதையும்,

(iv) இக்கலந்துரையாடலில் பங்கேற்ற நபர்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(v) உரிய கலந்துரையாடலுக்கு நிதி வழங்கியது யார் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0402 / '09

5.

கௌரவ வை. எம். நவரத்ன பண்டா,— கிராமிய கைத்தொழில், சுயதொழில் ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிராமிய கைத்தொழில், சுயதொழில் ஊக்குவிப்பு அமைச்சின் கீழ் இலங்கையில் உள்ள கைத்தொழில் குடியேற்றங்களின் எண்ணிக்கை மற்றும் அவை எவை என்பதையும்,

(ii) ஒவ்வொரு கைத்தொழில் குடியேற்றங்களில் உள்ள கைத்தொழிற் சாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) அவை வெவ்வேறாக எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2009 ஆம் அண்டு ஆரம்பமாகும் போது இயங்கி வந்த மற்றும் தற்போது மூடப்பட்டுள்ள கைத்தொழில் சாலைகள் எவையேனும் உள்ளனவா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், அவை எவை என்பதையும்,

(iii) 2009 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இயங்கி வந்த மற்றும் தற்போது ஊழியர்கள் நீக்கப்பட்டுள்ள கைத்தொழிற்சாலைகள் இருக்கின்றனவா என்பதையும்,

(iv) அவ்வாறெனின், அவை எவை என்பதையும்,

(v) மூடப்பட்ட கைத்தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு அரசினால் ஏதேனும் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(vi) நீக்கப்பட்ட ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணங்கள் எவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0432 / '09

6.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரசுக்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(ii) அந்தக் காணித்துண்டுகள் வெவ்வேறாக எவை என்பதையும்,

(iii) அந்த காணிகளில் தற்போது தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iv) அவ்வாறு யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(v) இந்த காணிகளை வழங்குவதற்காக பின்பற்றப்பட்ட வழிமுறைகள் எவை என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0063 / '09

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 01.01.2008 ல் அமுலுக்கு வந்ததும் வரவு செலவுத்திட்டத்தின் இலங்கையில் பதிவு செய்து கொள்வதனால், விமானங்களுக்கும் கப்பல்களுக்கும் நன்மைகள் வழங்கப்பட்டன என்பதைப் பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) 31.12.2007 வரை பதிவு செய்யப்பட்ட கம்பல்களையும் விமானங்களையும் வெவ்வேறாகவும்,

(ii) நன்மைகள் வழங்கப்பட்டதன் பின்னர் பதிவு செய்யப்பட்ட கம்பல்களினதும் விமானங்களினதும் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்

(iii) இதனால் வருமானத்தில் ஏற்பட்ட இழப்பினையும்,

(iv) "Flag of Convenience" நிர்வாகப் பதிவு செய்வதனால் எமக்கு கிடைத்த நன்மைகளையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(இ) (i) நன்மைகள் வழங்கப்பட்ட பின்னர் பதிவு செய்யப்பட்ட கப்பல்கள் மற்றும் விமானங்களின் உரிமையாளர்கள் மற்றும் அவைகளின் பங்காளர்கள்,

(ii) இதைவிட அதிகமான முன்னேற்றத்தினை அடைய முடியாமற் போனதற்கான காரணத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0083 / '09

8.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2008 ஆம் ஆண்டில் புகையிரதக் கட்டணங்களை அதிகரித்தமையால் மொத்த வருமானம் 3.671 மில்லியன் ரூபா வரை 22.4 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) எனினும் இலங்கை புகையிரத சேவையின் தொழிற்பாட்டு நட்டம் 4.553 மில்லியன் ரூபா வரை 5.9 சதவீதத்தால் 2008 ஆம் ஆண்டில் உயர்வடைந்துள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா ?

(இ) (i) புகையிரதக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டமையிளால் வருமானம் அதிகரித்துள்ளபோதிலும் இலங்கை புகையிரத சேவையின் நட்டம் அதிகரிக்க காரணங்கள் யாவையென்பதையும்,

(ii) விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரென்ற வகையில் இந்நிலைமயை மாற்றியமைக்க மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0229 / ’09

9.

கௌரவ பேமசிறி மானகே,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மருந்து வகைகள் கொள்வனவு செய்யப்படும்போது பின்பற்றப்படவேண்டிய கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்படாமல் 2003 ஆம் ஆண்டில் Spinal Needles 1650 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி அலகொன்று கொள்வனவு செய்யப்பட்ட விலை எவ்வளவென்பதையும்,

(ii) 2003 ஆம் ஆண்டில் Spinal Needles அலகொன்றின் சராசரி விலை யாதென்பதையும்,

(iii) Spinal Needles கொள்வனவு செய்யப்பட்டபோது ஏற்பட்ட நிதி ரீதியிலான நட்டம் எவ்வளவென்பதையும்,

(iv) மேற்படி நிதி முறைகேட்டிற்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள் யாவரென்பதையும்,

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0230 / ’09

10.

கௌரவ பேமசிறி மானகே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசத்தை கட்டியெழுப்புவதற்கான அமைச்சுக்கு பொறுப்பான அமைச்சரின் பெயர் என்னவென்பதையும்,

(ii) தேசத்தை கட்டியெழுப்புவதற்கான அமைச்சரவை அந்தஸ்தல்லாத அமைச்சர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) அவர்களது பெயர்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) தேச்ததை கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக் குழு கடந்த வருடம் எத்திகதிகளில் கூட்டப்பட்ட தென்பதையும்,

(ii) மேற்படி ஆலோசனைக் குழு 2009 ஆம் ஆண்டில் கூட்டப்பட்டதா என்பதையும்,

(iii) ஆமெனில், அது எப்போதென்பதையும் ,

(iv) மேற்படி ஆலோசனைக் குழு கூட்டப்படவில்லையெனில் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சர்,— பாராளுமன்ற தேர்தல்கள் (திருத்தம்),— 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

2.

நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சர்,— குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்),— குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினின்றும் விலக்குப்பெறுமாக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1),— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2009.05.26 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 4.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

5.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2009 ஓகத்து மாதம் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்படுமாக.

6.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்றத்தின் கட்டிடத் தொகுதியின் தற்போதைய நிலையினைப் பரிசோதனை செயவதற்கான தெரிகுழு,— பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியின் தற்போதைய நிலையினைப் பரிசோதனை செயவதற்காக 2005 பெப்புரவரி மாதம் 08 ஆம் திகதி கௌரவ சபாநாயகர் அவர்களால் நியமிக்கப்பட்ட தெரிகுழு, தன்னால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களை, 2009 பெப்புருவரி மாதம் 05 ஆம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாக பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இயலாதுள்ளதால் குறிப்பிட்ட தெரிகுழுவிற்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள கால எல்லை 96 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் பிரகாரம் 2010 பெப்புருவரி மாதம் 28 ஆம் திகதி வரை கால நீடிப்புச் செய்யப்படுமாக.

7.

கௌரவ (திருமதி) நிரூபமா ராஜபக்ஷ,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"போதிராஜாராம கல்வி மற்றும் கலாசார மன்றத்தைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியவர்களால் மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் 2009 ஆகஸ்ட் மாதம் 02 ஆம் திகதியிலிருந்து இலங்கையெங்கனும் நடைமுறைப்படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*2.

ஊழியர் சகாய நிதிய (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*3.

இந்தியக் குடிவரவு தொழிலாளர் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*4.

சொத்துக்களால் ஆதாரப்படுத்தப்பட்ட பிணைப் பொறுப்பளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*5.

பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*6.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*7.

தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*10.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*11.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*13.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*14.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*15.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*16.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*17.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*18.

இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழு (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*19.

பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*20.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டு மென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப்படுத்தப் பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றத் தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*25.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*26.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை மருத்துவப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதிய 1590 / 13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

27.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

புண்ணிய ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

இலங்கை சிறுகைத்தொழிற்சபை (கூட்டிணைத்தல்) (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

32.

விலங்குகளுக்குக் கொடுமையிழைத்தலைத் தடுப்பதற்கான இலங்கைச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் - பரிசீலனை.

33.

இலங்கை கடல்கடந்த முஸ்லிம் கல்விசார் நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் - பரிசீலனை.

34.

லஸந்த அலகியவன்ன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

35.

அல்ஹாஜ் அப்துல் ஜவாத் ஆலிம் வலிய்யுல்லாஹ் நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

36.

கொட்டாவ ஸ்ரீ புண்ணியாபிவர்தன விஹாரஸ்தான செயற்பாட்டுச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0381/ '09

1.

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மகிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனத்தின் 21ஆம் பக்கத்தில் (சிங்கள மொழிமூல) பிரேரிக்கப்பட்டுள்ளவாறு "ஜனசெவன" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராமத்திற்கும் 25 வீடுகள் வீதம் நிர்மாணிக்கப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(அ) (i) ஒட்டுமொத்தமாக நாட்டினுள் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவை எந்த மாவட்டங்களில் எந்த பிரதேச செயலகப் பிரிவுகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்பதையும்,

(iii) இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கண்டி மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) மேற்படி வீடுகள் அமைக்கப்பட்டுள்ள பிரதேச செயலகப் பிரிவுகளும் கிராம சேவைப் பிரிவுகளும் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0433 / '09

2.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை மாநகர எல்லைக்குள் அரசுக்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(ii) அந்தக் காணித்துண்டுகள் வெவ்வேறாக எவை என்பதையும்,

(iii) அந்த காணிகளில் தற்போது தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iv) அவ்வாறு யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(v) இந்த காணிகளை வழங்குவதற்காக பின்பற்றப்பட்ட வழிமுறைகள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0434 / '09

3.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்லேபொல பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரசுக்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(ii) அந்தக் காணித்துண்டுகள் வெவ்வேறாக எவை என்பதையும்,

(iii) அந்த காணிகளில் தற்போது தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iv) அவ்வாறு யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(v) இந்த காணிகளை வழங்குவதற்காக பின்பற்றப்பட்ட வழிமுறைகள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0435 / '09

4.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாவுல பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரசுக்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(ii) அந்தக் காணித்துண்டுகள் வெவ்வேறாக எவை என்பதையும்,

(iii) அந்த காணிகளில் தற்போது தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iv) அவ்வாறு யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(v) இந்த காணிகளை வழங்குவதற்காக பின்பற்றப்பட்ட வழிமுறைகள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0436 / '09

5.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) லக்கல பல்லேகம பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரசுக்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(ii) அந்தக் காணித்துண்டுகள் வெவ்வேறாக எவை என்பதையும்,

(iii) அந்த காணிகளில் தற்போது தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iv) அவ்வாறு யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(v) இந்த காணிகளை வழங்குவதற்காக பின்பற்றப்பட்ட வழிமுறைகள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0437 / '09

6.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வில்கமுவ பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரசுக்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(ii) அந்தக் காணித்துண்டுகள் வெவ்வேறாக எவை என்பதையும்,

(iii) அந்த காணிகளில் தற்போது தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iv) அவ்வாறு யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(v) இந்த காணிகளை வழங்குவதற்காக பின்பற்றப்பட்ட வழிமுறைகள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0438 / '09

7.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கலேவெல பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரசுக்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(ii) அந்தக் காணித்துண்டுகள் வெவ்வேறாக எவை என்பதையும்,

(iii) அந்த காணிகளில் தற்போது தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iv) அவ்வாறு யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(v) இந்த காணிகளை வழங்குவதற்காக பின்பற்றப்பட்ட வழிமுறைகள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0439 / '09

8.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தம்புல்ல பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரசுக்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(ii) அந்தக் காணித்துண்டுகள் வெவ்வேறாக எவை என்பதையும்,

(iii) அந்த காணிகளில் தற்போது தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iv) அவ்வாறு யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(v) இந்த காணிகளை வழங்குவதற்காக பின்பற்றப்பட்ட வழிமுறைகள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?